ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

विनाज्ञां ते विष्णो तृणमपि नदक्षं चलितुमि-
त्यनादिर्वाक्काचिद्वदति निजकर्मानुगुणतः ।
फलं लोकोत्तीति प्रकटयति चान्या निगमवाक्
'नजाने तत्तत्वं मद्वनभरस्ते ध्रुवमयम् ॥

விநாஜ்ஞாம் தே விஷ்ணோ த்ருணமபி நதக்ஷம் சலிதுமி
த்யநாதிர்வாக்காசித்வததி நிஜகர்மாநுகுணத: ।
பலம் லோகோத்தீதி ப்ரகடயதி சாந்யா நிகமவாக்
நஜாநே தத்தத்வம் மத்வநபரஸ்தே த்ருவமயம் ॥

ஹே விஷ்ணோ! ஸர்வ வியாபகரான ஹே லக்ஷ்மீபதே! உம்முடைய ஆக்ஞையன்றி திருணம் என்று கூறப்பட்ட புற்கூட தானுக சலிப்பதற்குச் சக்தியற்றது என்று அநாதியாய் விளங்கும் ஒரு வேதவாக்குமொழிகின்றது. மற்றொரு மறையின் வசனமானது உலகிலுள்ள பிராணிகள்யாவும் தம் தம் கர்மாவுக்குற்ற பலன்களை அனுபவிக்கின்றன என்று கூறுகின்றது. அவ்வேதங்களின் தத்வார்த்தத்தை அறிய நான் சக்தனல்ல. எப்படியிருந்தாலும் என்னை இரக்ஷிக்கவேண்டிய பொறுப்புத் தங்களுடையதே இது நிச்சயம்.

ஹே பிரபோ! மிகவும் பெரிதான இந்த ஸம்ஸார துக்கத்தைப் போக்கி உத்தமமான சுகத்தையடையவேண்டுமென்று இச்சைகொண்டு அதற்கு வேண்டிய உண்மையான ஸாதனங்களைச் சரியாய் நிரூபிக்கும் சக்தி அநாதியாய் விளங்கும் வேதங்களுக்கே இருக்கென்று கருதி அவைகளை உட்புகுந்து கவனித்தால் எம்போன்ற மந்தபுத்திகளுக்கு உண்மைப் பொருளையறிவது சாத்தியமாகத்தோன்றவில்லை. உண்மையான பொருள் அறியப்படாவிடில் ஸாதனங்களை நன்கறிந்து அனுஷ்டிப்பதும் சிரமமே யாகும். ஆகையால் என் சரீரத்தை உம்மிடம் அர்ப்பணம் செய்து விட்டேன். அதைப் பாதுகாக்கவேண்டியது உமது பொறுப்பேயாகும் என்று பக்தர் அறிவிக்கிறார்.

உபபத்திராதிபர்.

ஆர்ய தர்மம்.
பிரபவஹு ஆடி-மீ உ௦உ

# கலிகால தர்மோபதேஷ்டாக்கள்.

(403-வது பக்கத்தொடர்ச்சி)

அவ்விதம் இவர்கள் லோகக்ஷேமார்த்தமாய் அநுஷ்டிக்க வேண்டுமென்று கூறும், கர்மாக்களில் உலகத்தைக்கெடுக்க விதவாவிவாகம் ஒன்றே போதுமானது. இதுபோல் ஒவ்வொன்றும் அதிகமான சக்தியுடன் கூடியதே. இவையாவும் சேர்ந்து நடைபெருமாகில் அந்த ஸமயத்தில் இவ்விதம்தான் கஷ்டங்கள் நேருமென்று எவராலும் கூறவியலாது இவைகள் அநுஷ்டிக்கப்பட்டால் அதிக கஷ்டம் ஜனங்களுக்குண்டாகுமென்றுதான் முக்காலத்தையுமறிந்த மஹான்களான மஹர்ஷிகள் தபோபலத்தால் கண்டுபிடித்து அநுஷ்டிக்கக் கூடாதென்று ஸ்பஷ்டமாய்ஸ்மிருதிகளில் நிஷேதம் செய்திருக்கிறார்கள். உலகிலுள்ள ஸகல ஜனங்களும் கஷ்டப்பட வேண்டுமென்று கருதியா அவர்கள் தர்மசாஸ்திரங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு ஜனங்களிடம் பெருகி ஓடும் கருணை வெள்ளத்தில் அற்பமாவது அவர்களுக்குமிருக்காதா. மனு எதைச் சொல்லியிருக்கிறாரோ அது பூராவும் ஜனங்களுக்குச் சிறந்த ஔடதமென்று சுருதியும்சாற்றுகின்றதே. இதையாவது கவனிக்கக் கூடாதா? சுருதியும் பக்ஷபாதமாகவா கூறுகின்றது. தங்கள் மனத்தில் எதெது தோன்றுகின்றதோ, அதுயாவும் உலகநன்மையின் பொருட்டேயாகும். என்கிற பிடிவாதமான எண்ணத்தை விட்டுவிட்டுத்தர்மாநுஷ்டான விஷயங்களில் மஹான்களான மகரிஷிகள் அபிப்பிராயங்களையும் சற்று சமாதான மனதுடன் ஏன் கவனிக்கக்கூடாது. நாம்தான் லோகத்தைப் பாதுகாக்க அவதரிக்கிறோமென்கிற வீண் அகங்காரத்தை எதற்காகக் கொள்ளவேண்டும். இதுதானா அறிஞர்களுக்கழகு? சுருதிஸ்மிருதீமமைவாக்ஞா என்று ஸ்மிருதிகளைத் தம்முடைய ஆக்ஞைகள் என்று ஸ்ரீ பகவான் திருவாய்மலர்ந்தருளியிருப்பதால் ஸ்மிருதிகள் யாவும் ஸ்ரீ பகவானுடைய ஆக்ஞை

என்று ஸ்பஷ்டமாய் தெரிகின்றதே. இவர்கள் செய்யும் தர்ம வியவஸ்தையை இவர்கள் கோஷ்டியிலுள்ள சிலரைத் தவிர்த்து வேறு யாரும் அங்கீகரிக்கவில்லையே. இவ்விதமிருக்க ஸ்மிருதிகளில் செய்யப்பட்டிருக்கும் ஸித்தாந்தத்திற்கு விருத்தமாக தர்மஸ்தாபனம் செய்ய நாம் முன் வருவது உசிதமாகுமா? அவ்விதம் நாம் செய்தாலும் உலகிலுள்ள சகல ஜனங்களும் இதை எப்படி நம்பி அனுஷ்டிக்க முன் வருவார்கள் என்பதை ஏன் இவர்கள் கவனிக்கக்கூடாது. இவர்கள் எவ்வளவு முயற்சித்தாலும் தூண்டி என்கிற இயந்திரத்தின் நுனியிலுள்ள இரும்புக் கொக்கியில் மாம்ஸத்தைக் கோர்த்து குளங்களிலோ நதிகளிலோ போட்ட மாம்ஸத்தை நமக்கு நல்ல ஆகாரத்தைக் கொடுக்கிறான் என்று மதிமோசப்போய் அதை தின்று மீன்கள் எப்படிக்கூறவியலாத கஷ்டத்திற்குள்ளாகின்றனவோ அவ்விதம் தற்காலம் ஆபாஸமான விஷயசுகத்தில் விருப்பம் கொண்ட சேம்பேரிகளான சில அக்ஞர்கள் பிறகு வரும் கஷ்டங்களை அற்பமுமறியாமல் இவர்களுடை மாயவலையில் சிக்குண்டு சாஸ்திர விரோதமான பாபகர்மாவைச் செய்து கொடிய நரக துக்கத்திற்கு ஆளாவார்களேயல்லாமல் ஆஸ்திகர்களில் ஒருவரும் இதை அநுஷ்டிக்க முன் வரமாட்டார்கள் என்று சொல்லவும் வேண்டுமா? சாஸ்திரங்களின் உண்மைப் பொருளையறியாத சில சாமான்ய ஜனங்கள் இவர்களால் சொல்லப்படும் விதவாவிவாஹம் முதலான கொடிய பாபங்களுக்குக் காரணமான கர்மாக்களைச் செய்து நரகத்திற்கிரையாகாமலிருக்கவேண்டி அவர்களிடமிருக்கும் அநுதாபத்தால் தத்வார்த்தத்தை அவர்களுக்கு அறிவிக்கவேண்டி நாம் இந்த விஷயத்தை விசாரிக்க முன் வந்தோமேயன்றி ஆஸ்திகர்களையுத்தேசித்தல்ல. அவ்வித ஸாமான்ய ஜனங்களும் இவர்கள் கூறும் கர்மானுஷ்டானங்களிலுள்ள தோஷங்களை நன்கறிந்துகொள்ளவேண்டி சிலவைகளை இங்கு வெளியிட முன்வருகிறோம். முதலாவதான விதவாவாகத்தைப்பற்றிக் கொஞ்சம் விசாரிப்போம். இந்துக்களில் மத ஸம்மந்தமான ஸகல காரியங்களும் அவரவர்களுக் கேற்பட்ட சாஸ்திரவிதிகளையனுஸரித்து நடைபெற்றுவருகின்றனவேயன்றி அவரவர்களுக்குத் தோன்றியவாறு நடத்துவதென்பதில்லை.

உபபத்திராதிபர்.

---

424

# இவ்வருஷத்திய உபாகர்மம்.

நாளது பிரபவ வருஷத்திய யஜுர் உபாகர்மம் ஆடி-மீ 28உ வெள்ளிக்கிழமை சில பஞ்சாங்கங்களிலும் ஆடி-மீ 29உ சனிக்கிழமை சில பஞ்சாங்கங்களிலும் போடப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய் வெகுபேர்களுக்கு ஸம்சயம் நிகழ்ந்திருப்பதை நிவர்த்திப்பதின்பொருட்டு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள் அவர்கள் ஸ்ரீமடம் ஸ்ரீமகா ஸன்னிதான ஸபையில் ஆராய்ச்சி செய்யப்பட்டு கீழ்வருமாறு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

வைத்தியநாத தீக்ஷிதீயம் வர்ணாச்ரமகாண்டம் உபாகர்மப் பிரகரணத்தில் தைத்திரீய சாகிகளான யாஜுஷர்களுக்கு உபாகர்மகாலம் சிராவணபூர்ணிமை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும் முதல்நாளிலும் மறுநாளிலும் பூர்ணிமைஇருந்தால் மறுநாளில் ஸங்கவகாலத்திற்குப் பிறகு சில விநாடிகளாவது பூர்ணிமை புச்சம் இருந்தால் மறுதினத்தில் உபாகர்மம் செய்யவேண்டும். அப்படி மறுதினத்தில் இல்லாவிடில் முதல் தினத்தில்தான் செய்யவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இவ்வருஷத்தில் ஆடி-மீ 29உயன்று பூர்ணிமை ஸங்கவகாலத்திற்குப் பிறகு இல்லாதபடியால் 28உயன்றுதான் உபாகர்மம் செய்யவேண்டும். ஷை ஸங்கவகாலமென்பது ஷை 29உயன்று அஹர்மாண கணக்குப்படி உதயாதி 12-நாழிகை 24விநாடிகை வரைக்கும் ஆகிறது. 29உயில் ஷை காலம் வரையில் பூர்ணிமை ஒரு பஞ்சாங்கத்திலும் இல்லை. ஆகையால் எல்லா பஞ்சாங்கப்படிக்கும் இவ்வருஷம் உபாகர்மத்தை ஆடி-மீ 28உயில்தான் செய்யவேண்டும். 29உ காயத்ரீஜபம் செய்யவேண்டும்.

வரலக்ஷ்மிவிரதம் ஆடி மீ 28உ வெள்ளிக்கிழமையன்று செய்யவேண்டும். ஆனல் ஆந்திராள், கர்னாடகாள், மஹாராஷ்டிராள் முதலியவர்கள் சிராவண சுக்லபக்ஷம் 2-வது சுக்ரவாரத்தில் செய்வதென்கிற ஆசாரணையிருப்பதாலும் நிர்ணயஸிந்து முதலிய கிரந்தங்களில் அதற்கு ஆதாரமிருப்பதாலும் ஷை ஆந்திராள் முதலானவர்கள் இவ்வருஷத்தில் ஷை 2-வது சுக்கிரவாரமாகிய ஆடி-மீ 21உ வெள்ளிக்கிழமையன்று வரலக்ஷ்மி விருதம் செய்யவேண்டும்.

| | |
|---|---|
| முகாம் கஞ்சிக்கோடு<br>1—8—27 | ஸ்ரீ மடம் ஆஸ்தானவித்வான்<br>V. S. வெங்கட்டராம சாஸ்திரி |

# ஸந்தியாவந்தந விமரிசம்.

(௩௫௮-வது பக்கத்தொடர்ச்சி)

பிராணாயாமம் என்பது ஒவ்வொரு கர்மாவின் ஆரம்பத்திலும் ரொம்ப நியமத்துடன் செய்ய வேண்டிய முக்கியமான விதி. ஹிந்துமதத்துக்கே பெருத்த ஆதாரமாயும் அனுகியாயுமிருக்கப்பட்ட வேதங்களிலும் புராணங்களிலும் பக்தர்களாலும் மனிதனுக்கு ஆயுஸ் நூறு என்றே கூறப்பட்டுள்ளது.

शतमानं भवति शतायुः पुरुषः 𑌶𑌤𑌮𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑌿 𑌶𑌤𑌾𑌯𑍁𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌃 । என்கிற மந்திரத்தால் யஜுர்வேதத்தில் மனிதனுக்கு நூறு வயது அளவு என்றும் நூறு வயதளவும் ஜீவித்திருக்கிறான் என்றும் முறையிடப்பட்டிருக்கிறது. பஞ்சேந்திரியங்களுடன் வேலைசெய்யப்பட்டு அவரவர்களின் கணக்குப்படி நூறு வயதென்று நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக இதன் கருத்து.

பரமபக்தரான திருமங்கையாழ்வாரும் மனிதருக்கு வயது நூறு என்றும் அதன் பாகுபாட்டையும் பற்றி தான் இயற்றிய சிறிய திருமடல் என்னும் பிரபந்தத்தில் செப்பியிருக்கிறார்.

आयुर्वर्षशतंनृणां परिमितं रात्रौ तदर्थं गतं
तस्यार्थस्य परस्यचार्थमपरं बालत्ववृद्धत्वयोः ।
शेषं व्याधिवियोगदुःखसहितं सेवादिभिर्नीयते
जीवेवारितरङ्ग चञ्चलतरे सौख्यं कुतः प्राणिनाम् ॥

𑌆𑌯𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌷𑌶𑌤𑌂𑌨𑍃𑌣𑌾𑌂 𑌪𑌰𑌿𑌮𑌿𑌤𑌂 𑌰𑌾𑌤𑍍𑌰𑍌 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂𑌗𑌤𑌂
𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌧𑌸𑍍𑌯 𑌪𑌰𑌸𑍍𑌯𑌚𑌾𑌰𑍍𑌧𑌮𑌪𑌰𑌂 𑌬𑌾𑌲𑌤𑍍𑌵𑌵𑍃𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌯𑍋𑌃 ।
𑌶𑍇𑌷𑌂 𑌵𑍍𑌯𑌾𑌧𑌿𑌵𑌿𑌯𑍋𑌗𑌦𑍁𑌃𑌖𑌸𑌹𑌿𑌤𑌂 𑌸𑍇𑌵𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌨𑍀𑌯𑌤𑍇
𑌜𑍀𑌵𑍇𑌵𑌾𑌰𑌿𑌤𑌰𑌙𑍍𑌗 𑌚𑌞𑍍𑌚𑌲𑌤𑌰𑍇 𑌸𑍌𑌖𑍍𑌯𑌂 𑌕𑍁𑌤𑌃 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌨𑌾𑌮𑍍॥

மனிதர்களுக்கு வயது நூறென்றும் இரவில் ஐம்பது கழிந்துவிடுகிறது பாக்கி ஐம்பதில் முன்பின் இருபத்தைந்து வயது பால்ய விருத்ததசையிலும் பாக்கி இருபத்தைந்து வயதும், ரோகம், பந்துக்களின் பிரிவு விசாரம் பிரபுக்கள் சொற்கேழ்க்கும் தன்மை இத்துடன் நீர்க்குமிழிபோல் தவிக்கும் பிராணனுடன் கழிக்கப்படுகிறது என்று பரமயோகீசுவரரான பர்த்ருஹரியும் சொல்லியிருக்கிறார்.

ஆதிமுதல் முன்னோர்களில் பிரஸித்திபெற்ற ரிஷிகள் ராஜாக்கள், யோகீசுவரர்கள், அஸுரர்கள், ராக்ஷஸர்கள் முதலிய யாவரும் பிராணாயாமத்தாலே மூச்சையடக்கி ஆயுளை விர்த்திபண்ணிக்கொண்டு இஷ்டஸித்தியைப்பெற்றிருப்பதுடன் ரொம்ப பலசாலிகளாயுமிருந்திருக்கிறார்கள். வாயுபுத்திரனும் ஸ்ரீராமதூதனுமிருக்கும் ஹநுமார் நூறுயோஜனை விசாலமான ஸமுத்திரத்தைத் தாண்டி சிரமமில்லாமல் வெற்றியுடன் திரும்பியும் வந்தது இந்த ப்ராணாயாமபலத்தைக்கொண்டேதான் என்று பெரியவர்கள் கொண்டாடுகிறார்கள். தற்காலம் கலியுகபீமன் என்கிற புரொபஸர் ஸாண்டோ ஸ்ரீராமமூர்த்தி இந்தியாவின் பல பாகங்களிலும் மேல் நாடுகளிலும் யாத்திரைசெய்து ப்ராணாயாமத்தின் விசேஷத்தை ஜனங்களுக்கு பிரஸங்கம்புரிந்தும் அனுபவத்தில் பிரத்தியக்ஷமாய்க் காண்பித்தும் வருகிறார். இதை அநேகர் அனுஷ்டிக்கப் பயந்து இது மந்திரசக்தி என்றும் ஜாலவித்தை என்றும் சொல்லி வருகிறார்கள். ஆரம்பத்தில் சற்று கடினமாயிருப்பினும் பழகப்பழக ரொம்பவும் எளிதில் செய்யக்கூடியதே. எந்த விஷயமும் ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமமாயிருப்பது ஸஹஜம். இந்த ஸாமான்யப்பிராணாயாமத்துக்கு இவ்வளவு பெருமை இருக்கும்போது இதைப்பிராமணர்கள் ஒவ்வொரு தடவையிலும் ரேசக, பூரக, கும்பகத்துடன் ஆரம்பித்து மஹாமந்திரோச்சாரணத்துடன் கலந்து அனுஷ்டித்தால் தீர்க்காயுளை அடைந்து அரோகத்ருடகாத்திரத்துடன் எப்போதும் பகவத்யானம் செய்துகொண்டு மறுமையில் மோக்ஷத்தை அடைவதில் யாதேனும் தடையுண்டோ? எந்தக்கடினகாரியமும் பால்யத்தில் ஆரம்பித்துப் பழகுவது நெடுங்காலமாய் முன்னோர்களுடைய அனுஷ்டானமாதலால் अष्टवर्ष ब्राह्मणमुपनीयित அஷ்டவர்ஷம் ப்ராஹ்மணமுபநீயித எட்டாவது வயதில் பிராமணனுக்கு உபநயநம் கட்டாயம் செய்துவிடவேணுமென்று ஸூத்திரக்காரரும் கூறியிருக்கிறார். இது பெரியோர்களின் உபதேசத்துக்குச் சரியான காலமாதலால் மூச்சை அடக்கி எளிதில் பழக்கம் பண்ணக்கூடிய காலம் என்று தோன்றுகிறது. வயதானபிறகு கஷ்டமாகவே இருக்காது. கலியுகத்தின் பிரசாரத்தால் இந்த உபநயந கர்மாவை உத்ஸவமாக நினைத்து 16 வயதுவரையில் கூட செய்யாமலிருப்பதைப் பல தேசங்களிலும்காணலாம். பிராணாயாமத்துக்குஆரம்பிக்கும்காலம் உபநயநம். ப்ராணாயாமத்தில் உச்சரிக்கும் மஹாமந்திரமானது,

தைத்திரீயாருணசாகை 6-வது ப்ரச்னத்தில் விவரமாய்ச்சொல்லப் பட்டிருப்பதை ஆசாரியாளிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம். மஹாமந்திரமானதால் இங்கு எழுதாமல் இத்துடன் நிறுத்திக் கொண்டேன். ரேசகம் என்பது உள்ளிருக்கும் அசுத்தவாயுவை இடதுநாஸிகையால் வெளியில் தள்ளியும், பூரகம் என்பது வலது நாசிகையால் சுத்தவாயுவை உள்ளுக்குச்செலுத்துவது, கும்பகம் என்பது அந்த சுத்தவாயுவை வெளியில் வாராமல் ஸ்தம்பித்துக் கொள்வதுமாகும். இப்படிப்பட்ட பிராணயாமம் ஸந்தியாவந்த னத்தின் முக்கிய பாகங்களில் சேர்ந்து பலதடவைகளிலுபயோ கிக்கப்படுகிறது.

வைஷ்ணவர்களின் முக்கிய ஆசாரியனும், பெரிய திருமலை நம்பிவம்சத்திலுதித்தவருமான நாதமுனிகளென்னும் மஹானும் யோகாப்பியாஸத்துக்கு முக்கிய அங்கமாக இந்தப்பிராணயாமத்தை உபயோகித்ததும் தவிர இந்த ஆசாரியாளின் பிரியசிஷ்யரான குருகைக்காவலப்பன் என்னும்பெரியோரும் பிராணயாமத்தோடு கூடியயோகாப்பியாஸத்தைச்செய்தசிறந்தஸ்தலமாயும் தற்காலம் கிலமாயுமிருக்கும் இடத்தை கங்கைகொண்டபுரக்ஷேத்ரத்துக்கு மேற்கில் அரைமைல் தூரத்தில் பிரத்யக்ஷமாகக் காணலாம். மஹாகவி காளிதாஸரியற்றிய ரகுவம்ச காவியத்தில் சூரியவம்சத் தரசர்கள் யோகம் செய்துவந்ததாயும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் அர் ஜுனனுக்கு உபதேசித்தருளிய யோகசாஸ்திர ரூபமான பகவத் கீதையின் ஆரம்பத்தில் இதை அனுஷ்டித்து வந்ததாயும் பெரி யோர்களாலும் ஆசாரியாளாலும் சொல்லப்பட்டு வருகிறது. யோகம் முதலிய ஸகலகர்மத்துக்கும் முக்கியமான அங்கமாகப் பிரஸித்திபெற்றது இந்தப்பிராணயாமமேயாகும்.

இதை அனுஷ்டித்தவர்கள யாவரும்த்விஜன்மர்களே. இந்தக் கர்மாவானது முதல் மூன்றுவர்ணத்தவர்களுக்குமட்டும் உரியது. ஆகையால் ஒவ்வொரு பிராமணர்களும் இந்த பிராணயாமத்தை ஆசாரியாளிடம் கேட்டு நியமத்துடன் பிரதிகர்மாவின ஆரம்பத் திலும் செய்துவருவதுடன் சிறுவர்களை அனுஷ்டிக்கும்படிக்கும் சிக்ஷித்துவந்தால் அவர்களுக்கு பகவான் அரோகத்ருடகாத்திரத் தையும் தீர்க்காயுளையும் கொடுத்தருளுவார் என்றும் சாஸ்திரங்க ளின் அபிப்பிராயத்தைச் சுருக்கமாக இங்கு வெளியிட்டிருக்கி றேன்.

(தொடரும்)

தி. ந. தாததேசிகாசாரியார்.

# உபாகர்மம்.

இவ்வருஷம் உபாகர்ம விஷயமாய் ஓர் சந்தேகமேற்பட்டு அதை விலக்கவேண்டி நேற்று ஆடி மீ 13௳ வெளியான ஆர்ய தர்ம பத்திரிகையில் "வைதிகதர்மாபிமானியென்பவர் வருகிற ஆடி-மீ 28௳ வெள்ளிக்கிழமையில்தான் அனுஷ்டிக்கவேண்டும் என்றும், சாஸ்திரங்களுக்கு முறணாய் பண்டுருட்டிப் பண்டிதர் ஆடி-மீ 29௳யன்று அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்வது நியாயமில்லையென்றும் தீர்மானம் செய்திருக்கிறார். 'வைதிகதர்மாபிமானி' எழுதியபிறகு என்போலுள்ள அறிவிலிகள் அதைப்பற்றி அபிப்பிராயம் சொல்வது சாஸ்திரீயமாகாதாயினும் "அவர் கொள்கைக்குச்சரியான ஆதாரமிருந்து வெளியிட்டால் அது ஸரியாயிருப்பின் அங்கிகரிக்க ஆக்ஷேபமில்லை" என்று அவர் கூறியிருப்பதால் இவ்வுபன்யாஸத்தை எழுத முன்வந்தோம்.

2. இவ்வருடமுபாகர்மா ஆடி-மீ 28௳ வெள்ளிக்கிழமையன்று அனுஷ்டிக்கவேண்டுமென்பது இத்தேசத்தில் வழங்கிவரும் ஸ்ம்ருதி முக்தாபலமென்று வைத்தியநாத தீக்ஷிதீயப்படி என்றும் நிர்ணயசிந்து முதலிய கிரந்தங்களின்படி மறுநாளாகிய ஆடி மீ 29௳ சனிக்கிழமையென்றும் ஏற்படுகிறது என்று வைதிகதர்மாபிமானி நிர்ணயம் செய்திருக்கவேண்டுமென்று நம் கொள்கை. இவ்விதமே காலஞ்சென்ற எமது குரு ஸ்ரீ சுந்தரேசுவர சிரௌதிகளும் தமது பஞ்சாங்கத்தில் சென்ற விகாரி முதலிய வருஷங்களில் பிரசுரஞ்செய்து வந்திருக்கிறார்கள். ஸ்மிருதிக்கு உரையாசிரியர்களாகிய இவ்வைத்தியநாத தீக்ஷிதர், கமலாகரப்பட்டர் முதலியவர்களுள் இவ்விதமபிப்பிராயபேதமேற்படுவதற்கு யாது காரணம் என்று ஆலோசிக்குமிடத்து சதுர்த்தசியோடுகூடிய பௌர்ணமிக்குநிஷேதம்வசன நிர்ணயஸிந்துக்காரர் சொல்லுகிறார். அவ்வித வசனமே இருப்பதாக வைத்தியநாத தீக்ஷிதர் காட்டவில்லையென்பதே காரணமென்னேற்படும். யாது காரணம்பற்றி வைத்தியநாதர் காட்டவில்லையென்பது விளங்கவில்லை. ஆனால் அவர் காட்டாததால் நிஷேத வசனமில்லையென்றேற்படாதுவென்னில்நிஷேதவசனம்காளிகாபுராணத்திலுள்ளது

அப்புராணம் पुराणन्यायमीमांसा புராணந்யாயமீமாம்ஸா என்ற யாக்ஞவல்கியரின் வசனத்தால் பிரமாணமென்றேற்படுகிறது. ஸ்மிருதி வசனத்திற்குள் எனையோர் வசனம் முறண்படின் எவ்வசனம் பிரமாணமாகும்? विरोधेत्वनपेक्ष्यम् விரோதேத்வநபேக்ஷ்யம் என்றும் நியாயத்தையே கைகொள்ள வேண்டும். ஆனால் நிர்ணயசிந்து முதலிய கிரந்தங்களில் சொல்லப்படுமனேக வாசாரங்களில் தென்னாட்டில் நம்மவரால் அனுஷ்டிக்கப்படவில்லையாகையால் இவ்வுபாகர்ம விஷயத்திலுமக்கிரந்தம் நம்மவருக்குப் பிரமாணமாகாதென்று சிலர் கூறுகின்றனர். இது நியாயமார்க்கத்தையனுசரித்ததாய்த் தோன்றவில்லை. இங்கு நாம் அனுஷ்டானமில்லாத விஷயத்தை நிர்ணயசிந்து முதலிய கிரந்தங்களின் ஸகாயத்தால் அனுஷ்டானம் புதிதாய்ச் செய்ய வாரம்பிக்க வேண்டுமென்று கூறவந்தோமல்ல. பின், எல்லா தேசத்திலும் எல்லாராலும் விசேஷமாய் இத்தென்னாட்டாராகிய நம்மவரால் அனுஷ்டிக்கப்பட்டு வருமிவ்வுபாகர்மாவில் ஓர் அம்சத்தைக் குறித்து நிஷேத வசனம் ஒரு க்ரந்தத்தில் காணப்பட்டு, மற்றொரு கிரந்தத்தில் காணப்படாவிடில் நாம் யாது செய்வது என்று ஆலோசிக்கவே வந்தோம். இங்கு நாம் வைதிகதர்மாபிமானியை ஒன்று கேழ்க்க விரும்புகிறோம். (1) நிர்ணயசிந்து பிரமாண கிரந்தமா? இல்லையா? பிரமாணமென்றால் ஆடி-மீ 29௳ உபாகர்மா செய்யவேண்டிவரும். இல்லையேல், நிர்ணயசிந்துக்காரர் கமலாகரபட்டர் கூறும் தீர்மானம் பிரமாணமில்லையென்று தங்கள் கருத்தா? அவர் உதாஹரணமாய்க் கூறும் மூலஸ்மிருதிவசனங்களும் பிரமாணமில்லையென்பது கருத்தா? முன் கூறியதாயின் அவர் கூறும் எவ்விதத் தீர்மானமும் பிரமாணமில்லையோ? அல்லது வைத்தியநாத தீக்ஷிதருக்கு முறண்படின் பிறமாணமில்லையென்பது கருத்தோ? அல்லது சாஸ்திரீய நியாய விரோதங்களுக்கு முறண்படின் பிரமாணமில்லையென்பதுகருத்தோ? எவ்விதத்திர்மானமும் பிரமாணமில்லையென்பது ஒவ்வாது. शिष्टाकोप ஶிஷ்டாகோப நியாயத்திற்கு இலக்காகும் அவைதிகஸ்மிருதியல்லவாகையால் மூன்றாவதாயின் எமக்குமதுசம்மதமே. இரண்டாவதாயின் அஃதே இங்குவிசாரிக்க வேண்டும்.

நிர்ணயசிந்துக்காரர் கூறும் காளிகா புராணவசனம் வைத்தியநாத தீக்ஷிதீயத்திற்கு எப்படி விரோதமாகும், வைத்தியநாத

தீக்ஷிதரும் चतुर्दशी वेधः 𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑍀 𑌵𑍇𑌧𑌃 தோஷமில்லையென்று கூறியிருந்தால் அஃது தோஷமேயென்று கூறும் நிர்ணயசிந்துவிற்கு விரோதமாகும். ஒரு விஷயத்தைக் குறித்து ஒரே சமயத்தில் முன்பின் முரண்படும் வாக்கியங்கள் ஏற்பட்டால் அது விரோதமாகும் என்று ஆசிரியர் குமாரலபட்டர் வார்த்திகத்தில் கூறுகின்றார்.

युगपत्प्राप्तिहेतुश्च विरोधस्तस्य कार्ययोः ।

𑌯𑍁𑌗𑌪𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑍁𑌶𑍍𑌚 𑌵𑌿𑌰𑍋𑌧𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌯𑍋𑌃 ।

என்று ( तन्त्रवार्तिके ) 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌵𑌾𑌰𑍍𑌤𑌿𑌕𑍇 இங்கு அவ்விதமில்லையே. ஆகையால் வைத்தியநாத தீக்ஷிதீயத்திற்கு முரண்படாததால் அப்பிரமாணம் நிர்ணயசிந்துவின் தீர்மானமென்று கூறவியலாது. ஒப்பி ஸமாதானமளித்தல் "अभ्युपेत्यवादः 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑍍𑌯𑌵𑌾𑌦𑌃" என்ற நியாயப்படி நிர்ணயசிந்துக்காரர் தீர்மானம் பிரமாணம் ஆகாவிடினும் அவர் கூறும் மூல வசனங்களுமெங்ஙனம் பிரமாணமாகாதொழியும்? ஸ்மிருதி புராணங்கள் எல்லா சிஷ்டர்களாலும் அங்கீகரிக்கப்பட்டவையன்றோ! ஆகையால் காளிகாபுராணவசனமப்பிரமாணமென்று கூறுவது நியாயமன்று. அவ்வசனத்தை வைத்தியநாத தீக்ஷிதர், அப்பா தீக்ஷிதர் முதலிய இத்தென்னாட்டு உரையாசிரியர்கள் கவனிக்கவில்லையென்றே கொள்ளல் வேண்டும்.

3. இனி இவ்வசனம் யாது என்று விசாரிப்போம்.

संप्राप्तवान्श्रुतीर्ब्रह्मपर्वण्यौदयिके पुनः ।
अतो भूतदिने तस्मिन्नोपाकरणमिष्यते ॥

𑌸𑌂𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌵𑌾𑌨𑍍𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌰𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑌰𑍍𑌵𑌣𑍍𑌯𑍌𑌦𑌯𑌿𑌕𑍇 𑌪𑍁𑌨𑌃 ।
𑌅𑌤𑍋 𑌭𑍂𑌤𑌦𑌿𑌨𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍋𑌪𑌾𑌕𑌰𑌣𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

என்பது காளிகாபுராணவசனம். இதில் வியக்தமாய் சதுர்த்தசியுடன் கூடிய பௌர்ணமியில் உபாகர்மம் செய்வது நியாயமன்று என்று விளங்குகிறது. இதை மீறி உபாகர்மம் செய்தால் அதன் பயனும் நிந்தையாகக் கூறப்படுகிறது.

अथ चेद्दोषसंयुक्ते पर्वणि स्यादुपक्रिया ।
दुःखशोकामयग्रस्ता राष्ट्रे तस्मिन्द्विजातयः ॥

𑌅𑌪𑌰𑍇𑌦𑍍𑌯𑍁𑌷𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍇 𑌪𑌰𑍍𑌵𑌣𑌿 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌦𑌿 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 ।
𑌤𑌦𑍈𑌵𑌪𑍇𑌕𑍍𑌷𑌾𑌕𑌾𑌲𑌪𑍍𑌰𑌸𑍍𑌥𑌾 𑌨𑌾𑌦𑍍𑌯𑍇 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌜𑌾𑌤𑌪𑌃 ।

என்ற गार्ग्य ஸ்ம்ருதி வசனத்தால் இவ்விதம் முன் திதியுடன்சேர்ந்த பௌர்ணமிக்கு நிஷேதம் சொல்லியதுடன் பிரதமையுடன் கூடிய பௌர்ணமிக்கு அனுக்கிரகமும் சொல்லப்பட்டிருக்கிறது.

धनिष्ठाप्रतिपद्युक्तं त्वाष्ट्रऋक्षसमन्वितम् ।
श्रावणं कर्म कुर्वीरन् ऋग्यजुस्सामपाठकाः ॥

𑌧𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌤𑍍𑌵𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌋𑌕𑍍𑌷𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌂 𑌕𑌰𑍍𑌮 𑌕𑍁𑌰𑍍𑌵𑍀𑌰𑌨𑍍 𑌋𑌗𑍍𑌯𑌜𑍁𑌸𑍍𑌸𑌾𑌮𑌪𑌾𑌠𑌕𑌾𑌃 ॥

என்ற வசனத்தால் இதன் கருத்து:— "ரிக்வேதிகள் அவிட்டத்துடன் கூடிய திருவோணத்திலும், யஜுர்வேதிகள் பிரதமையுடன் கூடிய பௌர்ணமியிலும், ஸாமவேதிகள் சித்திரையுடன் கூடிய ஹஸ்தத்திலும் சிராவணம் என்கிற கர்மாவைச்செய்யவேண்டும்" என்பதே. ஆகையால் சதுர்த்தசிக்கு நிஷேதமும், ப்ரதமைக்கு அனுக்கிரகமும் ஏற்படுவதால் சூரியோதயத்தில் பௌர்ணமியிருக்கும் சனிக்கிழமையே உபாகர்மதினம் என்றேற்படுகிறது.

4. இனி,

श्रवणः श्रावणं पर्वसङ्गवस्पृग्यदा भवेत् ।
तदेवौदयिकं कार्यं नान्यदौदयिकं भवेत् ॥
श्रावणी पौर्णमासी तु सङ्गवात्परतो यदि ।
तदैवोदयिकं कार्यं नान्यदौदयिकं भवेत् ॥
सन्धिः सङ्गवतः पश्चादर्वागावर्तनाद्यदि ।
तत्रोपाकरणं कार्यं सद्यश्च समिदाहुतिः ।
सन्धिः सङ्गवतः प्राक्चेत् पूर्वस्मिन्पर्वणि क्रिया ।
श्वोभूते समिदाधानमेष श्रावणिको विधिः ॥

𑌶𑍍𑌰𑌵𑌣𑌃 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌂 𑌪𑌰𑍍𑌵𑌸𑌙𑍍𑌗𑌵𑌸𑍍𑌪𑍃𑌗𑍍𑌯𑌦𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌤𑌦𑍇𑌵𑍌𑌦𑌯𑌿𑌕𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑍌𑌦𑌯𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥
𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑍀 𑌪𑍌𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑍀 𑌤𑍁 𑌸𑌙𑍍𑌗𑌵𑌾𑌤𑍍𑌪𑌰𑌤𑍋 𑌯𑌦𑌿 ।
𑌤𑌦𑍈𑌵𑍌𑌦𑌯𑌿𑌕𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌂 𑌨𑌾𑌨𑍍𑌯𑌦𑍌𑌦𑌯𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

ஸந்தி: ஸங்கவத: பஶ்சாத்பவேத்பர்வணி சேத்யதி ।
ததோபாகரணம் கார்யம் ஸந்த்யாஶ்ச ஸாவித்ரீ ஹோமாதி: ॥
ஸந்தி: ஸங்கவத: ப்ராக்சேத் பர்வண்யேவோபாகரணக்ரியா ।
ஶ்வோ ஹோமஶ்சைவ ஸாவித்ர்யா நசேஷ ஶ்ராவணிகோ விதி: ॥

இது முதலான வைத்தியநாததீக்ஷிதர் வசனங்களுக்கு யாது கதி? என்பீரேல் கூறுவாம். முன் கூறிய இரண்டு வாக்கியங்களால் "உதயம், ஸங்கவாந்தம்" இவ்விரண்டையும்தொட்டுநிற்கும்பௌர்ணமியேமுக்கியமென்றேற்படுகிறது "ஸங்கவாந்தம்" அதாவது 12 நாழிகைக்குமேல்தொடாவிட்டால் அந்த பௌர்ணமிஉதயகாலத்திலிருப்பதாய் கிரகிக்கக் கூடாது என்பது "शुद्धाधिकतिथि அதாவது ஸாம்யாயிகதிதி" முதல்நாள் 60 நாழிகையும் பௌர்ணமியிருந்து மறுநாளும் திதிவிருத்தியால் ஸங்கவாந்தம் வரையிலிருக்கும் விஷயத்தால் என்றையதினம் உபாகர்மம் செய்யவேண்டியதென்று ஸந்தேகமுண்டானால் அவ்விஷயமாய்த் தீர்மானம் செய்வதற்கு ஏற்பட்ட வாக்கியங்கள் खण्डतिथि வ்ருத்திதிதி விஷயத்திலில்லையென்றுகொள்ளவேண்டும். शुद्धाधिक ஸாம்யாயிக திதி விஷயத்தால் இரண்டு தினத்திலும் உதயம்முதல் ஸங்கவாந்தம்முடிய பௌர்ணமியிருப்பதால் என்றையதினம் செய்யவேண்டியதென்ற ஸந்தேகமேற்படும். அதை நிவர்த்திசெய்யவே இவ்வசனங்கள் ஏற்பட்டனவென்று கொள்ளல்வேண்டும். இதை பின் இரண்டு வசனங்களும் விளக்குகின்றன. ஸங்கவத்திற்குமப்புறம் பௌர்ணமியிருந்தால் அன்றே உபாகர்மமும் காயத்ரீஹோமமும் பௌர்ணமிக்கும் பிரதமைக்கும் ஸந்தி ஸங்கவத்திற்கு அதாவது ஸங்கவாந்தத்திற்குமுன் ஏற்பட்டால் முதல்நாள் உபாகர்மவும், மறுநாள் காயத்ரீஹோமமும் செய்யவேண்டுமென்ற வசனங்களால் வியக்தமாகிறது. இவ்விதம் शुद्धाधिक ஸாம்யாயிக திதி விஷயமாக இவ்வசனங்களைக் கொள்ளவேண்டும். खण्डतिथि வ்ருத்திதிதி விஷயமில்லையென்று நீர் எங்ஙனம் கண்டறிந்தீர்? என்பீரேல் நிஷேத வசனமிருப்பதால்தான் இவ்விதம் கூறவேண்டுமென்போம். இவ்விதம் கூறுவிடில் நிஷேதவசனங்கள் கதியற்றதாய் விடும். பிரமாணமுள்ள எல்லா வசனங்களுக்கும் ஸமாஸமாய் தீர்மானம் செய்யவேண்டுவதே நியாயமுறையென்பதை ஒப்புக்

கொள்பவருக்கு நாம் கூறியபடி வியவஸ்தை செய்யவேண்டியது அவசியமென்று நன்கு விளங்கும். ஆகையால்

(1) உதயம் ஸங்கவம் என்கிற இரண்டிலும் வியாபித்திருக்கும் பௌர்ணமி மிகவும் முக்கியம்.

(2) இப்படியில்லாவிடில் உதயத்திலிருந்து 3 முகூர்த்தம் அல்லது 2 முகூர்த்தம் என்கிற ஸாமான்யசாஸ்திரப்படியான கர்மகாலத்தில் அதாவது 6 நாழிகை அல்லது 4 நாழிகை வரையிலாவது வியாபித்திருக்கும் பௌர்ணமி முக்கியம்.

(3) சதுர்த்தசியுடன் பௌர்ணமி கூடாது. வேறுகாலங்களில் பாத்ரபத! ஆஷாட பூர்ணிமைகளிலே செய்யவேண்டும்.

(4) இதையனுசரித்து இவ்வருஷம் ஆடி-ீ 28உ வெள்ளிக்கிழமை 16 நாழிகைவரையில் சதுர்த்தசியிருப்பதாலும், மருநாள் உதயத்திலிருந்து 10 நாழிகைவரை பௌர்ணமியிருப்பதாலும் சனிக்கிழமை (ஆடி-ீ 29உ) உபாகர்மம் செய்வதே எல்லா வாக்கியங்களுக்கும் முரண்படாத முறை.

(5) இத்தீர்மானம் வைதிகதர்மாபிமானிக்கு ஒவ்வாதொழின் வைத்தியநாததீக்ஷிதீயப்படி வெள்ளிக் கிழமையென்றும் மற்ற கிரந்தங்களின்படி சனிக்கிழமையென்றும் தீர்மானம் செய்வதே நியாயவழியாகும். அதைவிட்டு வெள்ளிக்கிழமையேதான் என்று சாதிப்பது பண்டிதருக்கழகல்ல.

மயிலாப்பூர், 29—7—27.

கடையம். கு. நடேச சாஸ்திரி.
வைத்திய விசாரதா.

---

# உபாகர்மம்.

இதுவரையில் நம் கடயம் சாஸ்திரியள் எழுதிய விஷயத்தைக் கவனித்தோம். வைத்தியநாத தீக்ஷிதீயமென்கிற தர்மசாஸ்திரத்தை அனுஷ்டானத்திற்குவைத்துக்கொண்டிருக்கிறகிருஷ்ண யஜுர்வேதிகளுக்கு இந்த-ஸூ ஆடி-ீ 28உ வெள்ளிக்கிழமை உபாகர்மம் செய்ய வேண்டுமென்று எமது அபிப்பிராயம்.

4-34

வேறான நிர்ணயசிந்து கோழப்பர் முதலான தர்ம சாஸ்திரங்களைப் பிரமாணமாகக் கொண்டு அனுஷ்டிப்போர்களும் இதற்கு மாறுதலாக அந்தக் கிரந்தங்களில் பிரமாண வசனமிருப்பின் அதையனுஸரித்து அவர்கள் அனுஷ்டிக்கக் கூடாதென்று நான் கருதவில்லை. எவரெவர்கள் எந்தெந்த ஸூத்திரத்தையோ தர்ம சாஸ்திரத்தையோ பிரமாணமாகக்கொண்டு தர்மானுஷ்டானம் செய்து வருகிறார்களோ அததின் ஸித்தாந்தப்படியே தான் அவரவர்களும் அனுஷ்டிக்கவேண்டியது நியாயம். அவ்விதம் நிர்ணயமாக்கமுடியாத விஷயங்களை இதர கிரந்தங்களைக்கொண்டும் தீர்மானித்துக்கொள்ளலாம். பிரகிருத விஷயத்தில் வைத்தியநாத தீக்ஷிதருடைய தர்மசாஸ்திரப்படி அனுஷ்டிப்போர்களுக்கு இதரக்கிரந்தத்தைப்பார்க்கவேண்டிய அவசியமிருப்பதாகத் தெரியவில்லை. ஆகையால் அதின்படி எம்மால் சொல்லப்பட்ட விஷயத்தை வேறுவிதமாக நினைத்து எழுதியிருப்பது சரியல்ல. ஸ்மிருதிகளும் ஆபஸ்தம்ப போதாயனாதி ஸூத்திரங்களும் மஹரிஷிகளாலியற்றப்பட்டபடியால் பிரமாணங்களாகவே அங்கீகரிக்க வேண்டும். ஆனால் எவரெவர்கள் எந்தெந்த ஸூத்ரத்தையோ ஸ்மிருதியையோ பிரமாணமாகக்கொண்டு அனுஷ்டானம் செய்து வருகிறார்களோ அதிற்கூறிய ஸித்தாந்தத்திற்கு முறணாக இதர ஸூத்திரங்களிலோ ஸ்மிருதிகளிலோ இருந்தால் அவ்விதமனுஷ்டிக்கமாட்டார்கள். ஆபஸ்தம்ப ஸூத்திரிகள் அதற்கு மாறுதலாய் போதாயன ஸூத்ரத்திலிருந்தால் அதை அங்கீகரிக்காமல் தம் ஸூத்திரத்தின்படியே அனுஷ்டிக்காவிட்டால் அவர்கள் போதாயன ஸூத்திரத்தை அப்பிரமாணமாகக் கருதுகிறார்கள் என்றுகருத்து. இதுபோல் போதாயன ஸூத்திரக்காரர்கள் ஆபஸ்தம்பர்முதலான ஸூத்திரத்தின்படி அனுஷ்டிக்காவிட்டால் அவர்கள் இதை அப்பிரமாணமென்று சொல்லுகிறார்கள் என்று கருதலாமா, எல்லா சாஸ்திரங்களிலும் அபிமானமும் பிரமாண புத்தியும் இருந்தாலும் தம்பெரியோர்களால் அனுஷ்டிக்கப்பட்டபடி நாமும் அனுஷ்டிப்போமென்று அவரவர்களும் அனுஷ்டிக்கிறார்கள். இதைக்கொண்டு பிறரிடத்தில் வீணான தோஷத்தைக் கற்பிப்பது தவறேயாகும். இவ்விதமிருக்கு முண்மையையறி

யாமல் நம் நடேசசாஸ்திரியார் நாம் வைதிகதர்மாபிமானியை ஒன்று கேழ்க்கவிரும்புகிறோம் என்று ஆடம்பரத்துடன் தமது அகங்காரத்தை வெளியிடும் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார் அவைகளுக்கு இதுவரையில் கூறியிருப்பதே போதுமானதாகும். இனியும் அனுவச்யமாய் விரிக்கவேண்டாமென்று விடுத்தனம். 3-வது பாராவில் காளிகாபுராணத்தின் வசனத்திற்கு விரோதம் வருகிறதென்று செய்யப்பட்டிருக்கும் விசாரம் நமக்கு அநாவச்யம். நாம் அனுஷ்டானத்தில் வைத்துக்கொண்டிருக்கும் வைத்தியநாத தீக்ஷிதிய க்ரந்தரீதியாய் சந்தேகத்திற்கே இடமில்லை. நிர்ணயஸிந்துவைப் பிரமாணமாக வைத்துக்கொண்டிருப்பவர்களுக்குத் தான் அதை கவனிக்கவேண்டும். மேலும் ஸ்மிருதி வசனத்திற்கு ஸ்மிருதி வசனமாயிருந்தால் ஒரு ஸமயம் கவனிக்க வேண்டுமோவென்று சங்கிக்கலாம். அப்படியிருந்தாலும் நமக்குள்ள ஸ்மிருதியின்படிதான் நாம் அனுஷ்டிக்கவேண்டும். புராண வசன விரோதம் நாம் கவனிக்கவேண்டியதில்லை.

4-வது விசாரத்தில் இவர்களாக குயுக்தி செய்துகொண்டு சந்தேகமேற்படக்கூடாதவிடத்தில் சந்தேகமேற்படுமென்று ஒரு விதம் தீர்மானம் செய்துகொண்டு வசனங்களுக்கு மாறுதலாகப் பொருள் கூறி தமதிஷ்டார்தத்திற்கு பிரமாணமாகக்காண்பித்திருக்கிறார் அதுவும் சரியல்ல.

4-ல் 3-ஆவது பாராவில் சதுர்தசியுடன் கூடிய பௌர்ணமி கூடாது என்று நிஷேதமிருப்பதாக அறிவிக்கிறார். சனிக்கிழமையுடன் கூடிய பௌர்ணமி கூடாதென்று இருக்கும் நிஷேதத்தை இவர் ஏன் கவனிக்கவில்லையே தெரியவில்லை.

4-ல்4ஆவது பாராவில் தாம் செய்தஸித்தாந்தத்தை அனுஸரித்து இவ்வருடம் 28வ வெள்ளிக்கிழமை உபாகர்மா செய்வது சரியல்லவென்றும் 29வ சனிக்கிழமை உபாக்கர்மாச் செய்வதே எல்லா வாக்கியபஞ்சாங்கங்களுக்கும் முரண்படாத முறை என்றும் முடிவுரை கூறியிருக்கிறார். துவக்கததில் இரண்டாவது பாராவில் ஆடிமீ 28வ வெள்ளிக்கிழமையன்று இவ்வருடம் வரும் உபாக்கர்மாவை அனுஷ்டிக்கவேண்டுமென்பது வைத்தியநாத தீக்ஷிதியப்படி என்றும் நிர்ணயஸிந்துமுதலான கிரந்தப்படி

மறுநாள் 29௳ சனிக்கிழமை என்று ஏற்படுகிறதென்று வைதிக தர்மாபிமானி நிர்ணயம்செய்திருக்கவேண்டுமென்றுநமகொள்கை என்று முடிந்துப் பிறகு இவ்விதமே காலம் சென்ற எமது குரு ஸ்ரீ சுந்தரேசுவர சிரௌதிகளும் சென்ற சில வருஷப்பஞ்சாங்கங்களில் பிரசுரம் செய்திருக்கிறார்கள் என்றும் இவர்களே எழுதியிருக்கிறார். அவ்விதமெழுதிய இவர் முடிவுரையில் 29௳ சனிக்கிழமை செய்வதே எல்லா வாக்யபஞ்சாங்கங்களுக்கு முறண்படாதமுறை என்று அறிவிக்கிறார், இவர் குரு இந்தமாதிரிவரும் ஸமயத்தில ஸ்மிருதிமுக்தாபலப்படி முதல் நாளும் நிர்ணயஸிந்து முதலிய கிரந்தப்படி மறுநாளும் அனுஷ்டிக்கவேண்டுமென்று தீர்மானித்திருக்கும் விஷயத்தை இவர் மறுநாளே எல்லாரும் செய்யவேண்டுமென்று சாஸ்திரார்த்தத்தைத் தீர்மானம் செய்து தமது குருவைக்காட்டிலும் தர்மசாஸ்திரத்தில் தமக்கு அதிகமான ஞானமிருக்கென்று அறிவிக்கிறார்போலும்.

5வது பாராவில் தாம்செய்த தீர்மானத்தில் தமக்கே சங்கை ஏற்பட்டு இந்தத் தீர்மானம வைதிகதர்மாபிமானிக்கு ஒவ்வாதொழின் வைத்தியநாத தீக்ஷிதீயப்படி வெள்ளிக்கிழமை, மைற்ற கிரந்தங்களின்படி சனிக்கிழமை என்றும தீர்மானம் செய்வது நியாய வழியாகும், என்று முடித்திருக்கிறார். அவர் செய்த ஸித்தாந்தத்தில் அவருக்கே சங்கை ஏற்படும்படி எதற்காகமெனக்கட வேண்டும், துவக்கத்திலேயே அநாவச்யமான விசாரத்தைநிறுத்தியிருக்கலாம். வைத்தியநாத தீக்ஷிதீயத்தைப் பிரமாணமாகக் கொள்ளும். தைத்திரீயசாகிகளானயாஜுஷர்களுக்குஆடி மீ 28௳ வெள்ளிக்கிழமைதான் செய்யவேண்டுமென்று செய்யப்பட்ட தீர்மானத்தையேஇவரும்முடிவில்கூறியிருக்கிறார். 28௳யையே இவ்வருஷத்திய உபாகர்மானுஷ்டானத்திற்கு முக்கியகாலமாகக் கொள்ளவேண்டுமென்று ஏற்பட்டது.

இவ்விதமே ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமடத்தில் ஸ்ரீ மஹாஸந்நிதான ஸபையில் பல பண்டிதமணிகளாலும் ஆடி மீ 28௳ என்றே தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

சுபம் !

வைதிகதர்மாபிமானி.